# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 23.07.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

ஆண்கள் பெண்களின் சில கடமைகளைப் பற்றி நான் கவனமூட்டுகிறேன். அல்லாஹ்வின் அருளால் ஜல்ஸாவுக்கு டியூட்டி தருகின்ற ஆண், பெண் தொண்டர்கள் போதுமான அளவுக்கு தர்பிய்யத் பெற்றவர்களாகவும், உறுதியாகவும் ஆகிவிட்டனர்.

ஒவ்வொரு தொண்டர்களும் தத்தமது பொறுப்புகளை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பணியை இன்னும் சிறப்பாக செய்வதற்கு பணிகளை மேம்படுத்துவதற்கு நினைவூட்டுவது அவசியமாகும். அது திருக்குர்ஆனின் கட்டளையும் ஆகும். நினைவூட்டுவதும் போதனை செய்வதும் முஃமின்களுக்கு பயனளிக்கிறது என்று இறைவன் கூறுகிறான்.

நினைவூட்டுவது நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு பயனளிக்கிறது. (51:56)

அதேபோன்று புதிதாக இவ்வருடம் டியூட்டிக்கு வருகின்றவர்களுக்கும் கூட டியூட்டியின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்வது அவசியமாகும். அதுபோன்று சில இளைஞர்களுக்கு முதன்முறையாக டியூட்டிக்கு வாய்ப்பு கிடைக்கலாம். அல்லது அவர்களுக்கு தமது பணிகளைப் பற்றி முழுமையாக உணராமல் இருக்கலாம். இந்த ஜல்ஸாவின் பணி சாதாரண பணியல்ல. ஜல்ஸாவின் விருந்தாளிகளுக்கு தொண்டு செய்வதற்காக பெரியவர்கள் சிறியவர்கள் அனைவரும் தம்மை அர்ப்பணிக்கின்றனர்.

இந்த விருந்தாளிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குரலுக்கு பதிலளித்தவாறு தமது இந்த ஆன்மீகப் பயணத்தில் இணைகின்றனர். ஜல்ஸாவுக்கு வந்திருப்பவர்களுள் சிலர் பொழுதுபோக்கிற்காக வருபவர்களும் உண்டு. விருந்தினர்கள் இவ்வாறு பொறுப்பில்லாமல் இருப்பதைக் காரணம் காட்டி டியூட்டியில் இருந்து நீங்கள் விலகிவிட முடியாது. அதேபோன்று வந்திருக்கக்கூடிய விருந்தாளிகளுள் பெரும்பாலார் U.K.–வில் வசிப்பவர்கள் ஆவர். அவர்கள் ஜல்ஸா நாள்களில் தமக்கு தரப்பட்ட கூடாரங்களில் தங்குகின்றனர். மூன்று நாட்களில் அவர்கள் ஜமாஅத்தின் எல்லா பிரிவு பணிகளுடனும் அவர்களுக்கு தொடர்பு ஏற்படுகிறது. எனவே ஒவ்வொரு பிரிவு தொண்டர்களுடனும் நல்லொழுக்கத்தைக் காட்ட வேண்டும். இவர்கள் U.K.யில் வசிப்பவர்கள்தான் அல்லது டியூட்டியில் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட மனிதருடன் முன் பகை, கோபம் இருந்து அதனால் அவருக்குரிய விருந்தோம்பலை வழங்காமல் போவது ஆகியவை கூடாது. இதுபோன்ற செயல்களைச் செய்யக்கூடியவர் தமது டியூட்டிக்கு துரோகம் இழைப்பவர்கள் ஆவர். முதலில் தமது எல்லா மனத்தாங்கல்களையும் மறந்து தமது கடமையை நிறைவேற்றுவதை முதல் கடமையாக கருதுங்கள். பிறகும் கூட ஒரு மனிதரைப் பற்றி எனக்கு கடுமையான மனக்கசப்பு உள்ளது. அவருக்கு என்னால் விருந்தோம்பல் செய்ய இயலாது என்று கருதினால், உடன் செயலாற்றும் தொண்டர்களிடம் அதனை தெரிவித்து அவரை கவனித்துக் கொள்ளுமாறு கூற வேண்டும். இன்னொரு வகை விருந்தாளிகள் U.K.–ல் வசிப்பவர்களாகவும், தினமும் ஜல்ஸாவைக் கேட்பதற்காக வீட்டிலிருந்து வந்து செல்பவர்களாகவும் உள்ளனர். ஓரிரு முறை மட்டும் ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் உள்ள உணவுகளை உண்பார்கள். இஸ்லாமாபாத்திலோ, ஹதீகத்துல் மஹ்தியிலோ உணவு உண்ணலாம். அவர்களையும் கவனத்தில் கொண்டு உணவு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அதுவும் அப்பிரிவின் பொறுப்பாகும். கடந்த வருடங்களில் சில பகுதியிலிருந்து இது சம்பந்தமான புகார்கள் வந்து கொண்டேயிருந்தன. உணவு வழங்கவில்லை என்பது மட்டுமின்றி தொண்டர்கள் நல்ல முறையில் எங்களை நடத்தவில்லை என்ற புகார் வந்துள்ளது. ஆய்வு செய்த போது அதில் தொண்டர்களின் தவறு கூட அதிகமாக இல்லை. எந்தப் பகுதியில் போய் அவர்கள் உணவு கேட்டார்களோ அங்கு உணவே கிடையாது.

எவ்வாறிருப்பினும், ஏதாவது ஒரு காரணத்தால் அங்கு உணவு வழங்கப்படவில்லை என்றாலும் அதனை அன்புடன் விருந்தாளியிடம் புரிய வைக்க வேண்டும். அதேபோன்று Parking மற்றும் Traffic Control -ஐ கவனிப்பவர்கள், Security பணி செய்யும் தொண்டர்கள் ஆகியோரும் விருந்தாளிகளிடம் உரையாடும் வேளையில் நல்லொழுக்கத்துடனும், சுமூகமாகவும் பழக வேண்டும். நான் முறையீடுகள், புகார்கள் வருவதாக கூறினேன். அது ஒரு சாதாரண விஷயமன்று. ஓரிரு இடங்களில் அவ்வாறு நடந்தாலும் முழு அமைப்பிற்கும் கஷ்டத்தை ஏற்படுத்தி விடும்.

பொதுவாக மிகவும் தைரியத்துடனும் பொறுமையுடனும் விருந்தாளிகளின வரம்புமீறலையும்கூட சகித்துக் கொள்ளும் தொண்டர்களும் இருக்கின்றனர்.

மூன்றாவது வகை விருந்தாளிகள் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருப்பவர்கள் ஆவர். சிலர் ஜமாஅத்தின் ஏற்பாட்டின் கீழ் மொத்தமாக தங்க வைக்கப்படுகின்றனர். சிலர் தமது பொறுப்பில் தங்கிக் கொள்கின்றனர். ஆனால் U.K.ஐ விட்டு வெளியிலிருந்து வந்த காரணத்தால் அவர்களது எதிர்பார்ப்புகளும் சற்று அதிகமாக உள்ளன என்பதும் சரி தான். அவர்களுள் சிலர் தவறான கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள். ஆனால் தொண்டர்கள் எவருக்கும், புகார் சொல்வதற்கான வாய்ப்பு கிடைக்காத அளவுக்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். பிறகு இன்னொரு வகை தொண்டர்களான விருந்தாளிகள் பாகிஸ்தான், இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வருகின்றனர். ஆப்பிரிக்கா, அமெரிக்காவிலுள்ள விருந்தாளிகளுக்கு சில பிரிவுகளின் விருந்தோம்பல் திருப்தியாக இருந்தாலும், மற்ற சில பணிப்பிரிவுகளின் சேவையைப் பெற வேண்டியது ஏற்படுகிறது. எனவே அவர்களின் உணர்வுகளை கவனிக்க வேண்டும்.

பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து விருந்தாளிகள் தமது ஏழ்மைக்கு இடையிலும் கிலாஃபத்தோடு அவர்களுக்கு இருக்கும் தூரத்தின் காரணமாக ஏற்பட்ட தாகத்தை தணிப்பதற்காக இங்கு வருகின்றனர்.

குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதிகள் உச்சகட்ட அநீதிக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவர்களுடனும் மிக மேலான நடைமுறையை காட்டும் தேவையுள்ளது. அவர்களின் சிலருக்கு மொழி பிரச்சனையும் உள்ளது. எனவே எந்த இடத்தில் அவர்களுக்கு சேவை தேவைப்பட்டாலும் தொண்டர்கள் அதனை வழங்க தயாராக இருக்க வேண்டும். எந்த விருந்தாளியாவது ஒரு தொண்டரிடம் ஓர் உதவி கேட்டால் அந்த தொண்டர் அக்குறிப்பிட்ட பிரிவின் தொண்டராக இல்லா விட்டாலும் எதிர்மறை பதில் கூறுவதற்குப் பதிலாக அவருக்கும் வழிகாட்டுங்கள். பொதுவாக பாகிஸ்தான் அஹ்மதிகளுக்கு இங்கு ஏதாவது உறவினர் இருக்கலாம்; அவர்கள் உதவி செய்வார்கள். ஆனால் அப்படி எதுவும் இல்லாதவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். கடந்த சில வருடங்களாக அல்லாஹ்வின் அருளால் ஜல்ஸாவின் மூன்று நாட்கள் போக கூடுதலாகவும் இங்கு விருந்தோம்பல் நடைபெறுகிறது. அம்மக்களின் தங்குமிடம் போன்றவற்றிற்கும் நல்ல ஏற்பாடுகள் உள்ளது. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று நினைவூட்ட வேண்டிய தேவை உள்ளது. எனவே பாகிஸ்தானிலிருந்து உறவினர்களைப் பெற்ற மக்கள் அந்த உறவினரான விருந்தாளிகளைப் பராமரிப்பது ஜல்ஸாவின் அமைப்பாளர்களின் பணிதான் என்று கருத வேண்டாம். உங்களுக்கும் அந்த பணி உண்டு. எனவே நீங்களும் விருந்தோம்பலின் முன்மாதிரியை நிறைவேற்ற வேண்டும்.

இன்னொரு வகை விருந்தாளிகள் முஸ்லிம் அல்லாதவர்கள்; அஹ்மதி அல்லாதவர்கள். இவர்கள் ஜமாஅத் அமைப்பின் கீழ் வருகின்றனர். இவர்களுக்கு மிகவும் சிறப்பான ஏற்பாட்டின் கீழ் விருந்தோம்பல் செய்யப்படுகின்றன. இருந்தபோதிலும் இம்மக்கள் நமது தொண்டர்கள் பணி செய்வதை உன்னிப்பாக கவனிக்கின்றனர். பணியாளர்களின் நல்லொழுக்கம், பணி செய்யும் முறை எல்லாவற்றையும் கவனிக்கின்றனர். பொதுவாக ஒவ்வொரு வருடமும் நமது சேவகர்கள், சேவகியர்களின் பணியினால் கவரப்படுகின்றனர். ஜெர்மனியிலும் கூட தற்போது கணிசமாக வெளியிலிருந்து விருந்தாளிகள் வரத்தொடங்கிவிட்டனர். அவர்களும் சேவகர்களின் செயலைப் பார்த்து கவரப்பட்டனர். இவ்வருடம் அதிகமாக

வந்தனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சேவகர்களின் இயல்பு நல்லொழுக்கம் காட்டுவதாக அமைந்து விட்டது. ஒரு விருந்தாளி நேரடியாக ஒரு பிரிவின் சேவகர்களின் சேவையைப் பெறாவிட்டாலும் கூட சேவகர்கள் பணி செய்வதைக் கவனிக்கும்போது, சேவகர்களின் ஆர்வமும் நல்லொழுக்கமும் அந்த விருந்தாளிகளை கவருகின்றன. சேவகர்கள் தமது பணிகளைத் தவிர ஒரு மவுன முபல்லிக் ஆகவும் கடமையாற்றி இரு மடங்கு நன்மையை பெறுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளுக்கு சேவை செய்ததன் நற்கூலி கிடைத்து விடுகிறது. அடுத்து அன்னியர்களுக்கு அஹ்மதிய்யத் ஆகிய உண்மை இஸ்லாத்தின் நிழற்படத்தை எடுத்து வைத்து நமது நல்லொழுக்கத்தால் இஸ்லாத்தை விளங்க வைக்கின்றனர். தமது உலகையும் மறுமையையும் அதன் மூலம் பெற்றுக் கொள்கின்றனர்.

எனவே ஜல்ஸாவின் டியூட்டிகளாகிய தமது பணிகளின் மூலம் ஒவ்வொரு தொண்டரும் இறைவனின் மகிழ்ச்சியை பெறுகின்றனர். அல்லாஹ் எல்லாருக்கும் நல்ல முறையில் தமது பணியை நிறைவேற்றும் தவ்ஃபீக் வழங்குவானாக! இவ்வருடம் டியூட்டி சம்பந்தமாக சில விஷயங்களை கூற விரும்புகின்றேன். கடந்த வருடத்திலிருந்து டியூட்டியில் பெரும் முன்னேற்றம் உருவாகியுள்ளது. பணிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் சாதாரண குறைகளைக்கூட அலட்சியப்படுத்த முடியாது. ஜமாஅத்தின் தரப்பிலிருந்து Card தரப்படுகிறது. அறிமுகமானவராக இருப்பினும் ஸ்கேன், செக்கிங் போன்ற பணிகளில் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். விருந்தாளிகளுள் சிலரது சாதாரண கோபங்களை சகித்துக் கொள்ளுங்கள். அதற்காக கடமை செய்வதில் குறைவு வைக்கவே கூடாது. இவ்விஷயத்தில் நான் இவ்வருடம் ஜெர்மனி ஜல்ஸாவின் முன்மாதிரியை கூற விரும்புகிறேன். ஜெர்மனி ஜல்ஸா ஸாலானாவுக்கு நல்ல ஏற்பாடு இருந்தது. கணிசமான வாயில்கள் இருந்தன. அதனால் நெருக்கடி ஏற்படவில்லை. ஒவ்வொருவரின் கார்டையும் சோதனை செய்து ஸ்கேன் செய்து போட்டோவுடன் கிளை அமைப்பின் பணிகள் சார்பாக அனைத்தும் அதில் வந்துவிடுகின்றன. இவ்வருடம் ஜெர்மனியின் சிறப்பான ஏற்பாடுகள் அல்லாமல் கட்டாய சூழ்நிலைக்காக உருவாக்கப்பட்ட பரிசோதனைகளும் பாராட்டுக்குரியவையாக இருந்தன. அல்லாஹ் அந்த எல்லா அஹ்மதி இளைஞர்களுக்கும் நற்கூலி வழங்குவானாக. அவர்களின் உள்ளத்தை வளப்படுத்துவானாக. அவர்கள் மிகவும் முயற்சி செய்து இந்த பணிகளை ஒழுங்குபடுத்தினார்கள். பொதுவாக நான் ஜெர்மனி ஜல்ஸாவுக்கு பிறகு அங்குள்ள இளைஞர்களின் பணிகளை பாராட்டுவதுண்டு. இவ்வருடம் அதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. எனவே அதனை இப்போது கூற விரும்புகிறேன். ஜல்ஸா நாட்களில் நுழைவாயிலில் Checking மற்றும் டியூட்டி ஏற்பாடுகள், தங்குமிடங்களில் அதிகமாக கண்காணிப்புகள் இருக்க வேண்டும். எல்லா இடத்திலும் 9 வயது பையன்களை நிறுத்தி விடக் கூடாது. அவர்களுடன் நல்ல அறிவுக்கூர்மையுள்ள அதிகாரிகள் நாயிப்கள் இருக்க வேண்டும். நான் ஏற்கனவே ஆரம்பத்திலேயே கூறியதுபோன்று நாம் உண்மையில் இறைவனைச் சார்ந்து நிற்கிறோம். எனவே ஒரு வினாடி கூட துஆவிலிருந்து காலியாக விட்டுவிடாதீர்கள். டியூட்டியின் போது துஆ செய்து கொண்டிருங்கள். பாதுகாப்பு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். தற்காலிக தங்குமிடங்கள் மார்க்கியில் உருவாக்கப்பட்டுள்ளன. அவை ஹதீகத்துல் மஹ்தியிலும் இஸ்லாமாபாத்திலும் உள்ளன. அல்லது நிரந்தர தங்குமிடங்கள் என்று கூறுவதாயின் பைத்துல் ஃபுதூஹ் மற்றும் இன்னும் சில இடங்கள் உள்ளன. அதுவன்றி மக்கள் தாங்களே உருவாக்கியுள்ள தனிப்பட்ட கூடாரங்கள் உள்ளன. இவை குறிப்பாக இஸ்லாமாபாத், ஹதீகத்துல் மஹ்தி போன்ற இடங்களில் உள்ளன. சில நேரங்களில் ஆங்காங்கே திருட்டுகள் நடக்கின்றன. எனவே பாதுகாப்பு ஏற்பாடுகளை குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். திருடுவதற்கு ஒருவரால் இங்கு வர முடிகிறது எனில் அவரால் நமக்கு மற்ற நஷ்டங்களும் கூட ஏற்படுத்த முடியும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். மக்கள் தமது மதிப்பு வாய்ந்த பொருள்களை எடுத்துச் செல்லுமாறு கூறினால் அவர்களுடன் எடுத்துச் சென்று விடுவர். இருந்தும் கூட காவல் பணியை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். உன்னிப்பான பார்வையுடன் அதனை செய்ய வேண்டும். எந்த வகையான சோம்பலும், அலட்சியமும் கூடாது. திருட்டு மட்டுமல்ல. மற்ற காரணங்களுக்காகவும் கவனம் தேவை. பிறகு பாதுகாப்பு கொடுப்பவர்கள், மற்ற டியூட்டியில் இருப்பவர்களும் எந்த சூழ்நிலையிலும் பீதியடையக் கூடாது. உணவு பற்றாக்குறை அல்லது விருந்தாளிகளிடம் Rush ஏற்படுகிறது அல்லாஹ்வின் அருளால் பொதுவாக அப்படி

நடப்பதில்லை. ஆனால் உணவு ஒரு இடத்தில் சமைக்கப்படுகிறது. வேறு இடத்தில் பரிமாறப்படுகிறது. எனவே தாமதம் ஏற்பட்டால் பொறுமையுடன் விருந்தாளிகளை சாந்தப்படுத்த வேண்டும். அதுபோன்று விருந்தாளிகள் வரும் போதும் போகும் போதும் போக்குவரத்துகளில் நெருக்கடி ஏற்படுகிறது. தொண்டர்கள் பொறுப்புடன் தமது பணிகளை செய்ய வேண்டும். விருந்தாளிகளுக்கும் பொறுமை, விவேகத்தை ஏற்பட செய்யுங்கள். இது தற்காலிக சிக்கல்தான் என்று விருந்தாளிகளுக்கு அறிவுறுத்த வேண்டும். கோபப்பட வேண்டாம் என்பதை உணர்த்துங்கள். கூடுதல் குறைவுகள் ஏற்படலாம். தற்போது நல்ல உஷ்ணமாக இருக்கிறது. எனவே தண்ணீரின் தேவை அதிகம் இருக்கும். பருவநிலை நன்றாக இருந்தால் தண்ணீர் அதிகம் தேவைப்படாது. இப்போது நல்ல சூடு இருக்கிறது. எனவே இப்பிரிவும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பிரிவாகி விட்டது. அதுபோன்று குளியலறை, கழிப்பறையில் தண்ணீர் வசதிகள் இவற்றையெல்லாம் கவனிப்பவர்கள் அனுபவம் வாய்ந்த சேவகர்களாக இருப்பினும் கூட விருந்தாளிகளின் அவசரத்தால் கூடுதல் குறைவு ஏற்பட்டு விடுகிறது. எனவே சேவகர்கள் தமது தரப்பில் சரியாக வைத்துக் கொள்வது மட்டுமின்றி விருந்தாளிகளுக்கு சரியான வழிகாட்டல்களும் வழங்க வேண்டும். அல்லாஹ் நல்ல முறையில் எல்லாருக்கும் தமது பணிகளை செய்வதற்கான தவ்ஃபீக் வழங்குவானாக. விருந்தோம்பலும் கூட ஓர் அஹ்மதியின் தனிச்சிறப்பாகும். ஒரு விருந்தாளி சிறப்பாக மார்க்க நோக்கத்திற்காக வருகிறார். அவரை காலத்தின் இமாம் விருந்தாளி என்று கூறியுள்ளார்கள். இந்நிலையில் விருந்தோம்பலும் பரக்கத் வாய்ந்தது. எனவே கவனமும் நன்றாக தேவைப்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகள் நான் கூறியது போன்று மார்க்க நோக்கத்தை நிறைவேற்றுவதற்கே வருகின்றனர். மார்க்க நோக்கம் என்ன? மார்க்கத்தைப் பற்றி அதிகமதிகம் தெரிந்து கொண்டு தம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்துதல், இறைவனது நெருக்கத்தை பெறுவதற்கு முயற்சி செய்தல் ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த நோக்கத்திற்காக வந்த விருந்தாளிகளை எப்படி பராமரித்தார்கள்? எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. நாம் பார்க்கிறோம். ஒரு விருந்தாளி வந்ததாக ஹஸ்ரத் நபிகள நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டினருக்கு செய்தி அனுப்புகின்றனர். தமது ஒவ்வொரு மனைவியின் வீட்டிற்கும் தூது அனுப்பினார்கள். இன்று எனக்கு ஒரு விருந்தாளி வந்துள்ளார். அவருக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யுங்கள். ஆனால் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இன்று எங்கள் வீட்டில் தண்ணீர் மட்டும் தான் இருக்கிறது என்ற செய்தி வந்தது. சாப்பிட எதுவும் இல்லை.

இதிலிருந்து அன்னாரின் மனைவிகளின் பொறுமையின் உச்சகட்ட தகுதியும் தெரிய வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய பரிசுத்த தன்மையின் காரணத்தால் புலம்பல் எதுவும் அவர்களிடம் இருந்து வெளிவரவில்லை. அன்னாரின் வீட்டினர் தாம் பசியோடு இருக்கிறோம் என்று கொஞ்சம் கூட உணர்த்தவில்லை. அவர்கள் பசியாக இருப்பது கூட விருந்தாளி வரும்போதுதான் தெரிய வந்தது. பிறகு அந்த விருந்தாளியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒரு சஹாபி அழைத்துச் செல்கிறார். அவரும் பெரும் வசதிபடைத்தவர் அல்லர். அவர் வீட்டிலும் குழந்தைகளுக்கு மட்டுமே சிறிது உணவு இருக்கிறது. அதே போன்று (பசியுடன்) குழந்தைகளை தூங்க வைத்து விட்டனர். அந்த உணவை விருந்தாளிகளின் முன் வைத்து விட்டனர். வீட்டின் விளக்கை அணைத்து விட்டு தாமும் சாப்பிடுவது போன்று வாயை மட்டும் அசைத்தனர். வீட்டினர் நம்முடன் ஏன் உணவு உண்ணவில்லை? என்ற உணர்வு விருந்தாளிக்கு வராமல் இருப்பதற்காக அவ்வாறு செய்தனர். பிறகு இறைவனது அன்புப் பார்வையைப் பாருங்கள். தமது அடியானின் இச்செயலைக் கண்டு அவனது அன்பு எவ்வாறு அதிகமானது என்று பாருங்கள். உடனே அவன் அந்த செய்தியை தனது அன்பிற்குரிய ரஸூலுக்கு கூறுகிறான். அந்த முஃமினான ஆண், அந்த முஃமினான பெண் ஆகிய இருவரின் அந்த செயல் என்னை சிரிக்க வைத்து விட்டது. அல்லாஹ்வை மகிழ்ச்சிப்படுத்திய அந்த முஃமினுக்கு அதனால் ஈருலகின் ரஹ்மத்துகளும் கிடைத்தன. அந்த அருளுக்கு முன்பாக விருந்தினருக்காக ஒருவேளை உணவின் தியாகம் என்ன பெரிய விஷயம் ஆகப்போகிறது?

நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய விருந்தோம்பலையும் பார்க்கிறோம். ஒரு யஹுதி, படுக்கையை அசுத்தமாக்கி விட்டுப் போய் விட்டார். அன்னார் தாமே அதனை சுத்தம் செய்தார்கள்.

சஹாபாக்கள், அன்பிற்குரியவரே! எமது தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம்! இந்த வேலையை எங்களிடம் விடுட்டு விடுங்கள் என்று கூறிய போது, இல்லை; இவர் எனது விருந்தாளி. நான் செய்கிறேன்; என்னை வேலை செய்ய விடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எமக்கு போதனை செய்தவாறு கூறினார்கள். ஒரு முஃமின் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் ஈமான் கொண்டிருப்பவருக்கு மூன்று அடையாளங்கள் உள்ளன. ஒன்று, அவர் நல்லொழுக்கம் காட்டி நல்ல வார்த்தைகளை பேசுவார். இரண்டு, எவரது மனமும் கஷ்டப்படுகிற வார்த்தைகளை வாயிலிருந்து வெளிப்படுத்திவிட வேண்டாம். ஏனெனில் தீய செயல் உங்கள் ஈமானை வெறும் வாதமாக்கி விடுகிறது. நீங்கள் நல்ல வார்த்தைகளைப் பேசுங்கள். இல்லையெனில் அமைதியாக இருந்து விடுங்கள். இதனால் நீங்கள் இறை திருப்தியைப் பெறுகிற அதே வேளையில் சமூகத்தின் அமைதிக்கும் உத்திரவாதம் அளித்தவர்கள் ஆவீர்கள். இன்னொரு விஷயம் அல்லாஹ் மற்றும் ரஸூலை ஈமான் கொண்டிருப்பவரின் அடையாளம் தனது அயலாருக்கு கண்ணியம் அளிப்பதாகும். அண்டை அயலாரின் உரிமையைப் பற்றி அல்லாஹ் தெளிவான கட்டளையைத் தந்துள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஃமின்களுக்கு எந்த அளவுக்கு அதிகமாக அண்டை அயலாரின் உரிமைகளைப் பற்றி வலியுறுத்தினார்கள் என்றால் அண்டை அயலாரை சொத்துகளுக்கு பங்குதாரராக்கி விடுவார்களோ என்று எண்ணினோம். நிரந்தர அயலார்களைப் பற்றி மட்டுமின்றி தற்காலிக அயலார்களைப் பற்றியும் கூறியுள்ளார்கள். சிறிது நேரம் உடன் அமர்ந்திருப்பவர் கூட அண்டை அயலாரின் வட்டத்தில் அடங்குவர். அவர்களின் உரிமையையும் வழங்க வேண்டும். நமது மார்க்க சகோதரர்களின் உரிமையையும் வழங்க வேண்டும். எனவே சில நாட்களின் அயலார்களாக இருப்பது மட்டுமின்றி மார்க்க சகோதரர் என்ற வட்டத்தினுள்ளும் வருகின்றனர்.

பிறகு ஒரு முஃமினுக்குரிய மூன்றாவது அடையாளமாக விருந்தோம்பல் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இதுவும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் வழியாகும். ஒரு முஃமினுடைய விருந்தோம்பலைக் கண்டு அல்லாஹ் எவ்வளவு மகிழ்ச்சியை தெரிவித்தான். அது மட்டுமின்றி தனது மகிழ்ச்சியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் இணைத்தான். தனது பசியை அவர் பொருட்படுத்தாதது மட்டுமின்றி குழந்தைகளின் பசியைக் கூட பொருட்படுத்தவில்லை. குழந்தைகளுக்காக சிறிது வைத்துக் கொள் என்று கூறவில்லை. மாறாக, தம்மையும் குழந்தைகளையும் கஷ்டத்தில் போட்டுக் கொண்டு விருந்தோம்பல் செய்ததைக் கண்டு அல்லாஹ் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். இவர்தான் உணமையான முஃமின் என்று சான்றளித்தான். அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது உறுதிகொண்டவர்களுக்காக தர வேண்டும். இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழியில் அன்னாரது உண்மைப் பேரன்பர் தமது சீடர்களை உருவாக்கினார்கள். இதன் மூலம் அல்லாஹ்வின் முஹப்பத்தை எல்லாரையும் விட அதிகமாக பெற்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தோம்பல் தற்காலிகமானதாகவோ ஒரு சிலருக்காகவோ இருந்ததில்லை. மாறாக, நிரந்தரமானதாகவும் பெரிய அளவிலும் இருந்தது. அன்னார் நிரந்தரமாக அவர்களின் ஹக்கை நிறைவேற்றினார்கள். ஆனால் பிறகும் கூட அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினான்.

அவர்கள் உம்மிடம் வரும் போது அவர்களிடம் தீய செயலைக் காட்டாதீர்கள். அவர்களின் பெருங்கூட்டத்தைப் பார்த்து அதிகபட்சமான விருந்தோம்பல் செய்தார்கள். ஆரம்பத்திலேயே அல்லாஹ் அவர்களிடம் மக்கள் வரப்போவது பற்றி தெரிவித்து விட்டான். மீண்டும் மீண்டும் இல்ஹாம் மூலம் அல்லாஹ் இதன் பக்கம் கவனமூட்டினான். ஏனெனில் மக்கள் கூட்டம் அதிகரித்துக் கொண்டே செல்லவிருந்தது. அவர்களுக்குப் பிறகு காலத்தின் கலீஃபாவும் ஜமாஅத் அமைப்பும் இந்த அசல் விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தது. இந்த போதனையை கவனத்தில் கொள்ளவேண்டியிருந்தது. விருந்தோம்பல் என்ற கடமையை மறக்காமல் இருக்க வேண்டியிருந்தது. இந்த முக்கியகடமை நமது பொறுப்பில் உள்ளது. இதனை விருந்தாளிகளுக்கு சேவை செய்யும் வாய்ப்பு பெற்ற ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு விருந்தோம்பல் செய்தார்கள் என்பதை சஹாபாக்கள் நேரில் கண்டு நம்மிடம் கொண்டு சேர்த்தார்கள். அன்னாரின் விருந்தோம்பலின் நடைமுறை எவ்வாறு இருந்தது. இதனைப் பற்றி சேக் யாகூப் அலி சாஹிப் இர்பானி தமது நூலில் எழுதியுள்ளார்கள். அவர் தாம் நேரில் கண்ட சில விஷயங்களை நம்மிடம் கொண்டு சேர்த்துள்ளார்கள். அதனை அவரது வார்த்தைகளிலேயே எடுத்து வைக்கிறேன்.

அவர் கூறுகிறார்: அன்னார் விருந்தாளிகள் வரும் போது மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். லங்கர் கானாவின் சேவகர்களிடம் முடிந்த வரை முயற்சி செய்து வேலை செய்யுமாறு கூறுவார்கள். விருந்தாளிகள் வந்தால் என்னிடம் தெரிவிக்க வேண்டும் என்றார்கள். மேலும் விருந்தாளிகள் எந்த ஊரிலிருந்து வந்தார்களோ அந்த ஊரின் உணவுகளை தெரிந்து உணவளிக்க வேண்டும். உணவை கவனத்தில் கொள்ள வேண்டியதன் நோக்கம் என்ன? அவர்களின் ஆரோக்கியம் சரியாக இல்லையெனில் அவர்களின் மார்க்கம் எப்படியிருக்கும்? அன்னார் விருந்தாளிகளுள் அன்னிய மார்க்கத்தை சார்ந்தவர்கள் எனில் அதிக நாள்கள் தங்க வைத்து மார்க்கத்தைப் புரிய வைக்க வேண்டும் என்று விரும்புவார்கள். பிறகு விருந்தாளிகளிடம் போலியான அலட்டல் காட்டுவதை விரும்பமாட்டார்கள்.

அன்னார் கூறுவார்கள்: விருந்தாளிகள் போலியான அலட்டல் எதுவுமின்றி தமது தேவையைக் கூற வேண்டும். அப்போதும் அவர்களின் கண்ணியத்தை கவனத்தில் கொண்டவாறு உபசரிக்க வேண்டும் என்று குத்தாம்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்கள். விருந்தினர்கள் ஓய்வு பெறுவதற்கு எல்லா வகையான தியாகமும் செய்வார்கள்.

மவ்லவி அப்துர் கரீம் சாஹிப் ஒரு சம்பவம் கூறுகிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லூதியானா போயிருந்தார்கள். ஜூன் மாதத்தில் பஞ்சாபில் கடுமையான வெயில் இருக்கும். புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு கட்டடத்தில் ஒரு கட்டில் கிடந்தது. புதிய கட்டடம் என்பதால் பருவநிலை மோசமாக தெரியாது. புதிய கல், தண்ணீர் பயன்படுத்தியிருப்பதால் கொஞ்சம் குளிர்ச்சி காணப்படும். வெளியில் இருந்து வந்தவர்களை விட உள்ளூரில் வசிப்பவர்களுக்கு அப்போதுள்ள சூட்டில் அந்த இடம் எவ்வளவு சுகமாக இருக்கும் என்பதனை உணர முடியும். மவ்லவி சாஹிப் கூறுகிறார்: அங்கு கிடந்த கட்டிலில் நான் படுத்துக் கிடந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு தான் தங்கியிருந்தார்கள். அதனைப் பார்த்து நான் பதறியவாறு எழுந்து அமர்ந்தேன். ஹஸ்ரத் (அலை) அவர்கள் என்ன எழுந்து உட்கார்ந்து விட்டீர்கள்? என்று கேட்டார்கள். ஹுஸுர், தாங்கள் கீழே உட்கார்ந்திருக்கிறீர்கள்? நான் எப்படி கட்டிலில் தூங்க முடியும்? என்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புன்முறுவல் செய்தவாறு, நான் உங்களுக்கு காவல் இருந்தேன். பிள்ளைகளின் கூச்சல் அதிகமாக இருந்தது. உங்களது தூக்கத்திற்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்று குழந்தைகளை அடக்கிக் கொண்டிருந்தேன் என்று கூறினார்கள். இந்த அன்பு விருந்தோம்பலை விட மிகவும் உயர்ந்தது. இத்தகைய அன்பை தாய் தந்தையிடம் காணலாம். ஏன்? இது அதனை விட பேரன்பு ஆகும். இது அல்லாஹ்வுடைய நபியின் பண்பாகும். ஆனால் நாம் இந்த பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளோம். எனவே இதன் சிறிது பகுதியையாவது நம்மிடம் கொண்டு வர வேண்டும். முன்மாதிரி காட்ட வேண்டும். பிறகு அன்னார் விருந்தினரின் தகுதியையும் கண்ணியத்தையும் கவனத்தில் கொண்டார்கள். ஆனால் பொதுவான விருந்தோம்பல் எல்லாருக்கும் ஒன்றாகவே இருந்தது. இங்கும் கூட அன்னிய சமூகத்தினைச் சார்ந்த அல்லது அஹ்மதியல்லாத விருந்தினர்கள் வருகின்றனர். சிலர் நாடுகளின் பிரதிநிதிகளாக வந்துள்ளனர். அல்லது ஆப்பிரிக்கா போன்ற சமூகங்களின் தலைவர்கள் வருகின்றனர். இவர்களின் விருந்தோம்பல்களும் சிறப்பாக செய்யப்படுகின்றன. இதிலும் ஆட்சேபனைக்கு எதுவும் இடமில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலும் இதுவேயாகும். சமுதாயத்தின் தலைவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கண்ணியம் செய்யப்பட்டது. ஜமாஅத் அமைப்பு அதிலும் கூட ஒரு நடுநிலையைப் பேண வேண்டும். சில சிறப்பான VIP கூடாரங்களில் எவருமே இருப்பதில்லை. தொண்டர்கள் மட்டுமே அங்கு உட்கார்ந்திருக்கின்றனர். இந்த தகவலும் எனக்கு கிடைத்துள்ளது. V.I.P –களின் பெயரில் தவறாக

பயன்படுத்தப்படுவது ஆரம்பமாகியுள்ளது. அல்லது நடைபெறுகிறது. இதனை ஜமாஅத் அமைப்பு கண்காணிக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் சிறப்பான விருந்தினர்களுக்கும் சிறப்பான ஏற்பாடு செய்யுங்கள். ஆனால் அது ஒரே மாதிரி இருந்தால் போதுமானது. அதிலும் நடுநிலையைப் பேண வேண்டும். பிறகு மூன்று நோக்கங்கள் தான் உள்ளன. விருந்தாளிகளை கவனிப்பது ஒரு முஃமினின் முதல் கடமையாகும். அதுவன்றி இரண்டு நோக்கங்களாவன; ஒன்று, தர்பிய்யத். இன்னொன்று தப்லீக். எனவே ஜல்ஸாவில் அந்த குறிப்பிட்ட பிரிவுகளுக்கு அது குறித்து கவனமூட்டிக் கொண்டிருக்க வேண்டும். ஜல்ஸா நேரத்தில் டியூட்டியில் இருப்பவர்கள் விருந்தாளிகளை அன்புடன் ஜல்ஸாவை கேட்குமாறு கவனமூட்ட வேண்டும். அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டிருப்பவர்களை மென்மையான முறையில் கட்டுப்படுத்தி ஜல்ஸா திடலுக்கு போகுமாறு கூற வேண்டும். அதே போன்று தப்லீக் பிரிவும் நமது பணியை மேற்கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நண்பர்கள், எதிரிகள் இருவரையுமே விருந்தாளி என்ற முறையில் எந்த பாகுபாடும் காட்டியதில்லை. பல எதிரிகளும் வந்துள்ளனர். ஆனால் விருந்தாளியாக எதிரிகள் வரும் போது குத்தாம்களிடம் இவர்களை உபசரிக்குமாறு கூறினார்கள். ஏனெனில் இவர் நமது எதிர்கொள்கையை உடையவர். எனவே நமது நடைமுறை அவர்களது உள்ளத்தில் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். அவர்களுக்கு எந்த பதிலும் கொடுக்க வேண்டாம். அதுபோன்றும் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

மவ்லவி அப்துல் ஹகீம் நஸிரா பாதி என்ற ஒரு கடுமையான எதிரி இருந்தார். அவரை நல்ல முறையில் விருந்தோம்பல் செய்யுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். லங்கர்கானாவிலோ அல்லது வேறு எங்கோ தங்க வைக்கவில்லை. மாறாக வெளியில் நவாப் சாஹிப் ஒரு புதிய கட்டடம் கட்டியிருந்தார். அதில் ஓர் அறையில் தங்க வைத்தார்கள். அதனால் அவரை நல்ல முறையில் கவனித்துக் கொள்ள முடியும் என்று கருதினார்கள். குத்தாம்களிடம் கூறினார்கள்: யாரும் அவரிடம் எந்த பேச்சும் பேச வேண்டாம் என்று கூறியிருந்தார்கள். அவரோ வாக்குவாதம் செய்வதற்காக வந்திருந்தார். ஆனால் எதுவும் செய்யாமல் திரும்பி போய் விட்டார்.

இவ்வாறு காதி மவ்லவி என்ற ஒருவரைப் பற்றிய சம்பவம் பிரபல்யமாக இருந்தது.அவர் ஏச்சுப் பேச்சுக்களிலேயே கவிதைகளை உருவாக்குபவர். குறிப்பாக அவருக்கு வஹ்ஹாபிகளைப் பிடிக்காது. இருந்தபோதிலும் ஹுஸுர் (அலை) அவர்கள் அவரை நல்லமுறையில் விருந்தோம்பல் செய்தார்கள்; விருந்தோம்பல் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அந்த மவ்லவியிடம் ஒருவர், நீங்கள் இவரது (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) விருந்தோம்பலை ரசித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களே? இவரும் ஒரு வஹ்ஹாபி தான் என்று கூறினார். இந்த செய்தி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எட்டியபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள: அதிகமாக என்னை ஏசினார்தான். ஆனால் நான் ஒருபோதும் அவரிடம் அதனை தெரிந்ததாக காட்டிக் கொள்ளவில்லை. என்னைப்பற்றி அவரிடம் கூறிய (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் ஒரு வஹ்ஹாபி தான் என்று) கூற்று ஒரு வகையில் சரியே. ஏனெனில் நானும் திருக்குர்ஆனுக்குப் பிறகு சரியான ஹதீஸ்களை செயல்படுத்துவதை மிக அவசியமாக கருதுகிறேன். எவ்வாறிருப்பினும் இதுபோன்ற பல சம்பவங்கள் உள்ளன. அதன் விளக்கங்கள் நமது நூல்களில், எழுத்துக்களில் உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வழிகாட்டியும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியைப் பார்த்து உருவாக்கிய நடைமுறைகளை நாமும் நம்முடையதாக்கி செயல்படுத்தும் நல்வாய்ப்பை வழங்குவானாக. நாம் விருந்தாளிகளின் உரிமையை வழங்குபவர்கள் ஆவோமாக. மேலும் நான் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். முன்னரும் கூறினேன். கண்களை திறந்து வைத்துக் கொண்டு சுற்றுப்புறத்தை கவனித்து வாருங்கள். ஏனெனில் ஜமாஅத்திற்கு எதிர்ப்புக் காட்டுவதில் எதிரிகள் எல்லா ஒழுக்கத்தையும் கைவிட்டு விட்டனர். நல்லொழுக்கத்தை எதிர்பார்க்க இயலாது. மாறாக, எந்த ஒரு விஷமத்தையும் இவர்களிடம் எதிர்பார்க்கலாம். அல்லாஹ் நல்ல முறையில் நமது கடமையை நிறைவேற்றச் செய்வானாக. எல்லா தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுகை நடத்துவேன். இவர் முபாரக்கா பேகம் சாஹிபா. இவர் சூஃபி நஸீர் அஹ்மத் சாஹபின் மகள் ஆவார். 19 ஜுலை 2010 அன்று சிறிது நோயுற்று மரணமடைந்து விட்டார். இவருக்கு வயது 99. ஜெர்மனியில் இருந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நல்ல கனவுகளை காண்பவர். துஆ செய்பவர். சான்றான்மைமிக்க பெண் ஆவார். கிலாஃபத் மீது பேரன்பும் விசுவாசமும் உள்ளவர். சில நாட்களுக்கு முன் மரண நோய் ஏற்பட்டது. அப்போதும் என்னைப் பற்றி விசாரித்துக் கொண்டிருப்பார். தம்மைப் பற்றிய கவலை இருந்ததில்லை. மற்றவருக்கு பயனுள்ளவராக இருந்தார். மற்றவருக்கு துன்பம் தர மாட்டார். மாறாக மற்றவரது துன்பத்தையும் தாம் சுமந்து கொள்வார். தியாகத்தின் இயல்பு கொண்டவர். ஒருமுறை அவரிடம் துஆ செய்யச் சொன்னால் தொடர்ந்து துஆ செய்து கொண்டேயிருப்பார். சாதாரண நன்மையையும் கண்ணியம் செய்வார். தன்னிறைவு மிக்கவர். ஒரு நகையை உருவாக்கினார். அதனை மர்யம் ஸாதி ஃபண்ட் -ற்கு கொடுத்து விட்டார். கொஞ்சம் பணம் இருந்தது. அதனையும் பிலால் ஃபண்ட் -ல் சேர்த்து விடுமாறு கூறிவிட்டார். மர்ஹூமா அவர்கள் தமது சகோதரர்களின் மனைவிமார்களும் மரணித்த பிறகு குழந்தைகளின் தஃலீம் தர்ப்பியத்திற்கு ஏற்பாடு செய்தார். அதுவும் தனது வரம்புக்கு உட்பட்ட வருவாயில் அதனை செய்தார். அவரது நினைவாக ஒரு மகள் 4 மகன்கள் உள்ளனர். இரு மகன்கள் ஜமாஅத்திற்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள். முகர்ரம் ஜலால் ஷம்ஸ் சாஹிப் Better Desk -ன் இன்சார்ஜ் ஆக உள்ளார். இன்னொருவர் அமீர் ஜாவித் சாஹிப் Private Secretary ஆக உள்ளார். இன்னொரு மகள் வாழ்க்கையை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்தவர். ஹனீப் மஹ்மூத் சாஹிப். ரப்வாவில் நாயிப் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலரின் மனைவி ஆவார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். இந்த வகையில் வாழ்வை அர்ப்பணித்தவரின் மனைவியும் வாழ்வை அர்ப்பணித்தவர் என்ற அடிப்படையில் மர்ஹூமாவுக்கு இரண்டல்ல மூன்று குழந்தைகள் வாழ்வை அர்ப்பணித்துள்ளனர் என்று கூற வேண்டும். அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக. மக்ஃபிரத்தை வழங்குவானாக. நான் முன்னர் கூறியது போன்று ஜுமுஆவுக்குப் பிறகு இவரது ஜனாஸா தொழுகை நடைபெறும்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 23.07.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**